# **ADM COURT, SANKARANKOVIL**

**தேதி 21.08.2024**

**அசல் வழக்கு எண். 295/2012**

**வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது தகப்பனார் பெயர் இருளப்பன் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு நானும், ஆறுமுகம் என்பவரும் வாரிசுகள் என்றால் சரிதான். எனது சகோதரர் ஆறுமுகம் குலசேகரன்கோட்டை கிராமத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். குலசேகரன்கோட்டை கிராமத்தில் இருளப்பன் மகன் ஆறுமகன் என்பது எனது சகோதரர் என்றால் சரிதான். ஆறுமுகத்தின் மனைவி பெயர் குருவம்மாள் என்றால் சரிதான். மேற்சொன்ன குருவம்மாள் எனது கணவரின் உடன்பிறந்த சகோதரி என்றால் சரிதான். எங்கள் குடும்பத்திலும், எனது கணவர் குடும்பத்திலும் பெண் கொடுத்து பெண் எடுத்துள்ளோம் என்றால் சரிதான். பிரதிவாதியின் கணவர் பெயர் வெள்ளச்சாமி என்றால் சரிதான். நான் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய சொத்தை அனுபவிக்கவிடாமல் இடையூறு செய்துவருகிறார்கள். அதனால் வழக்கை தாக்கல் செய்துள்ளேன். இன்றைய தேதிவரை வழக்கு சொத்தை நான்தான் பாதுகாத்து வருகிறேன். எவ்வளவு சொத்தற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2 ஏக்கர் 35 சென்டுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்திற்கு மேல்புறம் தென்வடலாக ரோட உள்ளது என்றால் சரிதான். ரோட்டிற்கு மேல்புறம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட நிலங்கள் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட மேற்சொன்ன 3 ஏக்கர் இருக்கும் என்றால் எனக்கு விஸ்தீரணம் தெரியாது. ரோட்டிற்கு மேற்கே உள்ள பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடத்தில் ஒரு கிணறு உள்ளது என்றால் சரிதான். அந்த கிணற்றிலிருந்துதான் ரோட்டிற்கு மேற்குபுறம் உள்ள இடத்தை பிரதிவாதி பயிர் செய்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. அந்த கிணறு முழுவதும் பிரதிவாதிக்கு

பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அந்த கிணற்றில் எனக்கு பங்கு இல்லை என்றால் சரிதான்.

2. வழக்கு சொத்து புஞ்சை நிலம் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் கிணற்றுப்பாசனம் கொண்ட இடம் என்றால் சரியல்ல. மழை பெய்தால்தான் பயிர் செய்யமுடியும். ரோட்டிற்கு மேற்குபுறம் உள்ள கிணற்றிலிருந்து நான் எந்தகாலத்திலும் தண்ணீர் எடுத்து பயன்படுத்தி வரவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதி என் மீதும், என்னுடைய கணவர் மீதும் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதி எங்களுக்கு எதிராக புகார் கொடுத்திருந்தார் என்றாலும், அதன் அடிப்படையில் எங்களுக்கு எதிராக குற்ற எண்.250/2012 முதல்தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. 29.08.2012 அன்று எங்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு எங்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டபிறகு 17.09.2012 அன்று நான் இந்த வழக்கை தாக்கல செய்தேன் என்றால் சரியல்ல. எங்கள் மீது எந்த முதல்தகவல் அறிக்கையும் பதிவுசெய்யப்படவில்லை. நானாகதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். என் மீதும், என் கணவர் மீதும் சங்கரன்கோவில் நீதிமன்றத்தில் எத்தனை உரிமையியல் வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் வேறு எந்த வழக்கும் இல்லை. சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தில் நான் முனியாண்டி என்பவருக்கு எதிராக அசல் வழகது எண்.31/2021 வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அது எங்களுடைய பூர்வீக சொத்து சம்பந்தமாக தாக்கல் செய்துள்ளேன். எனக்கு எதிராகவும், என் கணவருக்கு எதிராகவும் செல்லபாஸ்கர் என்பவர் சங்கரன்கோவில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழகது எங்களுக்கு சாதகமாக தீர்ப்பாகிவிட்டது. எதற்காக அந்த வழக்கை செல்லபாஸ்கர் தாக்கல் செய்தார் என்றால் எங்கள் சொத்தை தவறாக கிரையம் பெற்றுக்கொண்டு எங்கள் மீது

வழக்கை தாக்கல் செய்தார். இவ்வழக்கு சொத்தின் நான்குபுற மால்கள் எனக்கு தெரியும்.

2. எனது கணவர் நிலங்களை வாங்கி விற்பனைசெய்யும் தொழில் செய்து வந்தார் என்றால்சரியல்ல. எனது கணவருக்கு விவசாயமும், மாடு பால்வியாபாரம் தெரியும். மூவேந்திரன் என்பவரடமிருந்து எனது சகோதரர் ஆறுமுகம் கிரையம் வாங்கியதாக நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ–1 ஆவணம் எந்த தேதியில் எழுதப்பட்டுள்ளது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. அந்த ஆவணத்தில் யார் சாட்சிக்கையெழுத்து செய்துள்ளார்கள் என்றும், எவ்வளவு தொகைக்கு ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்றும் எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தை எழுதிய பத்திர எழுத்தாளர் யார் என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணம் பதிவுசெய்தபோது யாரெல்லாம் உடன் இருந்தார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தை பற்றி யாரிடம் கேள்வி கேட்கவேண்டும் என்று எனக்கு தெரியாது.மூவேந்திரன் என்பவரை நான் ஒருமுறை நேரடியாக பார்த்துள்ளேன்.

3. வழக்கு சொத்தை ஆறுமுகம் என்பவரிடமிருந்து யார் கிரையம் வாங்கினார் என்றால் எனது கணவர் கணேசன் என்பவர் கிரையம் வாங்கினார். வா.சா.ஆ.1 எழுதப்பட்ட 20 நாட்களில் எனது கணவர் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். எனது கணவர் வாங்கிய வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. எனது கணவர் சொல்லித்தான் தெரியும். அதிலிருந்து 10 நாட்களுக்குள் எனது கணவர் என் பெயருக்கு வா.சா.ஆ. 3 ஆவணத்தை எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனது கணவர் கணேசனுக்கு மேற்சொன்ன மூவேந்திரன் என்பவரை தெரியுமா என்றால் தெரியும். அதிக பழக்கம் இல்லை. மூவேந்திரன் என்பவர் எங்கள் கிராமத்தில் நிறைய சொத்துக்களை விற்பனை செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. எனது கணவருக்கு பத்திரங்களில் சாட்சிக்கையொப்பம் செய்து பழக்கம்உள்ளது

என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை நான் கிரையம் வாங்கிய காலத்தில் வழக்கு சொத்து சுமார் ரூ.10 லட்சம் மதிப்பு இருக்கும் என்றால் சரியல்ல. ரூ.50000 தான் மதிப்பு இருக்கும். நான் எனது கணவரிடம் ரூ.50000 கொடுத்து கிரையம் வாங்கினேன். எனக்கும், எனது கணவர் கணேசனுக்கும் கருத்து வேறுபாடு இல்லை என்றால் சரிதான். நானும், எனது கணவரும் ஒன்றாக வாழ்ந்து வரும் நிலையில் நான் எனது கணவரிடம் பணம் கொடுத்து கிரையம் வாங்கவேண்டிய அவசியம் என்ன என்றால் எனக்கு நான்கு குழந்தைகள் உள்ளது. எனது கணவருக்கு குடிப்பழக்கம் இருப்பதால் எங்கள் குழந்தைகளின் நலனுக்காக பணம் கொடுத்து கிரையம் வாங்கினேன். காரிச்சாத்தான் கிராமத்தில் எனது கணவருக்கு எவ்வளவு நிலம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. எனது கணவர் நிறைய சொத்துக்களை கிரையம் வாங்கினார் என்றால் எனக்கு தெரியாது.

4. வழக்கு சொத்து ஆதியில் ராஜாமணி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்து ராஜாமணியால் கிரையம் வாங்கப்பட்ட சொத்து என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. ராஜாமணிக்கு சங்கர், மணிமாறன், ராஜா ஆகிய 3 பிள்ளைகள் என்றால்சரிதான். வழக்கு சொத்தும், வழக்கு சொத்திற்கு மேற்குபுறம் உள்ள ரோட்டிற்கு மேற்குபுறம் உள்ள இடமும் ஆதியில் ராஜாமணிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். வழக்கு சொத்தையும், ரோட்டிற்கு மேற்குபுறம் உள்ள உள்ள சொத்தையும் விற்பனை செய்வதற்காக ராஜாமணியின் 3 மகன்களும் சேர்ந்து மூவேந்திரன் என்பவருக்கு பொதுஅதிகார ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. ஆறுமுகம் எதன் அடிப்படையில் மூவேந்திரன் என்பவரிடமிருந்து வழக்கு சொத்தை கிரையம் பெற்றார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. தபசில் சொத்திற்கான ராஜாமணி பெயரில் உள்ள மூல ஆவணத்தை நான் ஆறுமுகம் என்பவரிடமிருந்து பெற்றுக்கொண்டேனா என்றால் பெற்றுக்கொண்டேன். அவ்வாறு எந்தமூல ஆவணத்தை நான்

வாங்கியுள்ளேன் என்றால் எனது கணவர் எனக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தை வாங்கியுள்ளேன். ஒரு சொத்தை கிரையம் வாங்கும்போது அந்த சொத்திற்கான மூல ஆவணத்தை பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியும். நான் சொத்தை கிரையம் வாங்கியபோது ராஜாமணி பெயரில் உள் ளஆவணத்தையோ, ராஜாமணியின் பிள்ளைகள் எழுதிக்கொடுத்த பவர் பத்திரத்தையோ நான் பெற்றுக்கொள்ள முயற்சி செய்யவில்லை என்றால் என்னுடைய கிரைய ஆவணத்தை மட்டும்தான் நான் வாங்கிக்கொண்டேன். மற்ற ஆவணத்தை பற்றி நான் கேட்கவில்லை. எனது சகோதரர் ஆறுமுகத்தை விசாரணை செய்தால் வழக்கு சொத்திற்கான மூல ஆவணத்தை பற்றியும், வா.சா.ஆ.1 கியைர ஆவணத்தை பற்றியும் தெரியவரும் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எனது கணவர் கணேசன் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தை பற்றி எனக்கு தெரியாது. நான் வழக்கு சொத்தை கிரையம் பெற்ற போது வழக்கு சொத்திற்கு எனது கணவர் பெயரிலோ, எனது சகோதரர் ஆறுமுகம் பெயரிலோ பட்டா இல்லை என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய காலத்தல் வழகவு சொத்து யார் அனுபவித்தில் இருந்தது என்றால் ராஜாமணியின்பிள்ளைகள் அனுபவத்தில் இருந்து வந்தது.

**பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**